
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1050

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

# செம்மொழிப் பூங்கா!

## கோவை பேசும் புதிய பெருமை !

**நீரை.மகேந்திரன்**

151

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

2010-ஆம் ஆண்டு கோவையில் ‘செம்மொழி’ மாநாடு நடத்தி, தமிழுக்குப் பெருமை சேர்த்தார் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழகம் பெருமை பெற்ற அந்த மாநாட்டில், கோவைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் ‘செம்மொழிப் பூங்கா’ அமைக்கப்படும் என்கிற அறிவிப்பை வெளியிட்டார். ஆனால், ஆட்சி மாற்றத்தில் கோவை மக்களின் நீண்ட நாள் விருப்பம் நிறைவேறாமலேயே இருந்தது. 2010-ஆம் ஆண்டில் கலைஞர் வெளியிட்ட அறிவிப்பை, 2021-ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்கான ஆணையைப் பிறப்பித்தார் திராவிட மாடல் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

அதன்படி, 2021-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ஆம் தேதி, கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், காந்திபுரத்தில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நடைபாதை போன்ற அனைத்து கட்டமைப்புகளும் கொண்ட செம்மொழிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பை செயல்பாட்டுக்குக் கொண்டு வரும் வகையில், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகப் பகுதியில் 165 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க திட்டங்கள் தீட்டப்பட்டு 2023-ஆம் ஆண்டு டிசம்பர் 18-ஆம் தேதி, செம்மொழி பூங்கா அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார்.

முதற்கட்டமாக 45 ஏக்கர் நிலப்பரப்பில், உலகத் தரத்திலான பூங்கா அமைப்பதற்கு 208.50 கோடி ரூபாய் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

### சங்க இலக்கிய மர வகைகள்

நீர்வீழ்ச்சியுடன்கூடிய நுழைவு வாயில், சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள செண்பக மரம், செம்மொழி வனம், நறுமண வனம், ஐந்திணை வனம், நலம் தரும் வனம், மலர்வனம், புதிர் வனம், நிழல் வனம், 1,000-க்கும் மேற்பட்ட ரோஜா வகைகள் கொண்ட ரோஜா தோட்டம், மூலிகை தோட்டம், பசுமை வனம் உள்ளிட்ட பல வகையான தோட்டங்கள் என வியப்பூட்டும் வகையில் தயாரான செம்மொழிப் பூங்காவை நவம்பர் 25-ஆம் தேதி நம் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, கோவை மக்களின் நீண்ட நாள் கனவை நிறைவேற்றினார். அதன் மூலம் முத்தமிழறிஞர் கலைஞரின் அறிவிப்புக்கும் உயிரூட்டினார்.

செம்மொழி வனம், மூலிகை தோட்டம், மகரந்த தோட்டம், நீர்த் தோட்டம், மணம்கமழ் தோட்டம், பாலைவனத் தோட்டம், மலர்த் தோட்டம், மூங்கில் தோட்டம், நட்சத்திர தோட்டம், ரோஜா தோட்டம், பசுமை வனம் போன்ற 23 வகையான தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

செம்மொழி வனத்தில் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மரங்கள் மற்றும் செடிகள் நடப்பட்டு உள்ளதோடு, 2,000-க்கும் மேற்பட்ட ரோஜா வகைகள் ரோஜா தோட்டத்தில் நடப்பட்டுள்ளன. அத்துடன் இப்பூங்கா வளாகத்தில் கடையெழு வள்ளல்களின் கற்சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன.

செம்மொழி பூங்காவில், தோட்டங்களில் உள்ள மரம் மற்றும் செடி வகைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு க்யூ.ஆர் கோடு வசதி செய்யப்பட்டுள்ளது.

### மரபுக்கலை அரங்கம்

செம்மொழி பூங்கா தவிர, தமிழ் மரபுக்கலை நிகழ்ச்சிகளுக்குப் பயன்படும் வகையில் 500 பேர் அமரக்கூடிய திறந்தவெளி அரங்கம், மாற்றுத்திறனாளிகளுக்கென பிரத்யேக விளையாட்டுப் பூங்கா, மேம்படுத்தப்பட்ட நடைபாதை, 100-க்கும் மேற்பட்ட கல் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பூங்கா முழுவதும் இரவில் வண்ண அலங்கார விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதால் மாலை நேரங்களில் கண்கவர் காட்சியாகவும் ஈர்க்கிறது.

பூங்கா வளாகத்தில் தரை தள வாகன நிறுத்துமிடத்தில் மொத்தம் 453 கார்கள், 10 பேருந்துகள் மற்றும் 1,000 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் அளவுக்கு கட்டமைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.





### கட்டணங்கள்

நுழைவுக் கட்டணமாகப் பெரியவர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.15, குழந்தைகளுக்கு (10-வயதுக்குட்பட்டோர்) ரூ.5, நடைப்பயிற்சி செய்வோருக்கு ஒரு நபருக்கு (மாதாந்தர கட்டணம்) ரூ.100, கேமராவுக்கு ரூ.25, வீடியோ கேமராவுக்கு ரூ.50, திரைப்பட ஒளிப்பதிவுக்கு (நாளொன்றுக்கு) ரூ.25,000, குறும்பட ஒளிப்பதிவுக்கு மற்றும் இதர ஒளிப்பதிவுக்கு ரூ.2,000 எனக் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பூங்கா காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்படும்.

> **கோவை மக்களுக்கு புதிய பொழுதுபோக்கு இடம் மட்டுமல்ல; பேசும் பெருமையாகவும் மாறியுள்ளது.**

மேலும், செம்மொழிப் பூங்கா வளாகத்தினுள் ஜெர்மன் தொழில்நுட்பத்தில் மழைநீர் சேகரிப்பு வடிகால் அமைப்பு 2 கிலோ மீட்டர் நீளத்துக்கு அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்கா வளாகத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்வதற்கு நடைபாதை மற்றும் சாலை வசதி அமைக்கப்பட்டுள்ளதோடு, மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக ‘மதி அங்காடி’-யும் நிறுவப்பட்டுள்ளது.

பூங்கா வளாகத்தினுள், உலகத் தரத்தில் உயர்தர உடற்பயிற்சி கருவிகளுடன்கூடிய திறந்தவெளி உடற்பயிற்சிக்கூடம், 4,000 சதுர அடி பரப்பளவில் உள்வன மாதிரி காட்சியமைப்பு (Terrarium),

குழந்தைகள் விளையாடுவதற்கு 14,000 சதுர அடி பரப்பளவில் விளையாட்டுத்திடல், சிறுவர்களுக்கான உள்விளையாட்டு அறை எனப் பல்வேறு பொழுதுபோக்கு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த செம்மொழிப் பூங்கா, கோவை மக்களுக்கு புதிய பொழுதுபோக்கு இடம் மட்டுமல்ல; பேசும் பெருமையாகவும் மாறியுள்ளது.

**...சாதனை தொடரும்**

## விடியல் பெண்களின் வெற்றிக் கதைகள்!

திராவிட மாடல் ஆட்சியில் பயன் பெற்றுக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டுப் பெண்களின் அனுபவக் கதைகளைப் பேசிய ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ நிகழ்ச்சி பல பெண்களுக்கும் உத்வேகம் அளித்துள்ளது. இது தொடர்பாக, தொகுப்பாளர் டோஷிலா உமாசங்கர் முகநூலில் எழுதிய பதிவு.

‘662.68 கோடி விடியல் பயணங்கள் யாருடையது?

கல்வியைத் தேடி வெளியே வந்த பெண்ணின் பயணம். வேலைக்காக காலை சீக்கிரம் கிளம்பும் பெண்மணியின் பயணம். வாழ்க்கையை முன்னேற்றி விட வேண்டும் என்ற உறுதியின் பயணம். தொழில் தொடங்க வேண்டும் என்று துணிந்த பெண்களின் பயணம். நண்பரை சந்திக்க, மன அமைதியைத் தேடி சில நிமிடத்தைப் பெற முயன்ற பெண்களின் பயணம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய பல நலத் திட்டங்களின் துணைகொண்டு கல்வி தொழில் என அத்தனை கனவுகளையும் சாதிக்கலாம் என்று நிரூபித்த பெண்களின் கதைகளைக் கொண்டாடும் நிகழ்வே வெல்லும் தமிழ்ப் பெண்கள்.

கலைஞர் உரிமைத் தொகை திட்டம் மூலம் கல்விக் கனவுகளை நனவாக்கிய பெண்கள், நலன் காக்கும் ஸ்டாலின் திட்டம் மூலம் சுகாதார பாதுகாப்பைப் பெற்ற பெண்கள், பிங்க் ஆட்டோ திட்டம் மூலம் சுயதொழிலில் தன்னம்பிக்கை பெற்ற பெண்கள், புதுமைப் பெண் திட்டம் மூலம் உயர்கல்வியின் வாசலை, தைரியமாகத் தட்டிய பெண் மாணவிகள், தங்கள் வாழ்வை தாங்களே வடித்துக்கொண்ட வெற்றிக் கதைகளைப் பகிர்ந்து, அந்த அனுபவங்கள் மற்ற ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான பெண்களுக்கு உற்சாகமாக, வழிகாட்டியாக, உயிர்ப்பாகப் பகிர்ந்துகொண்ட நெகிழ்ச்சியான நிகழ்வு’ எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



பா.ரவிக்குமார்



### தலைவரைக் காணும் வாய்ப்பு!

2010-ஆம் ஆண்டு வாக்கில், எங்கள் தொழிற்சங்கத்தின் சார்பில் தொ.மு.ச பேரவையின் பொதுச் செயலாளர் ஐயா சண்முகம் அவர்களோடு சென்று அன்றைய முதலமைச்சர் தானைத் தலைவரை சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. தலைவரைக் கண்ட நாள் என் வாழ்வின் பொன்னாளாகும்.

**– பா.ரவிக்குமார், பெருவிடைமருதூர், டாஸ்மாக் பணியாளர் முன்னேற்றச் சங்க மாவட்டச் செயலாளர். திருவாரூர் மாவட்டம்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## ம்லவூருக

### ஒன்றிய அதிகாரம் குறைக்க வேண்டும்!

1957-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், சென்னையில் நடைபெற்ற கழகத்தின் தேர்தல் சிறப்பு மாநாட்டில் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில், ‘அதிகாரங்களும் வருவாயும் ஒன்றிய ஆட்சிக்கே பெரிதும் அளிக்கப்படுகின்றன. மாநில ஆட்சியில் வருவாய் பெருக வழி இல்லாமல் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எனவே, மாநிலங்களின் அதிகார வரம்பும், வரிவிதிப்பு உரிமைகளும் அதிகரிக்கப்பட்டு, ஒன்றிய ஆட்சியின் அதிகாரங்களுக்கும் வரிவிதிப்பு உரிமைகளுக்குமான வரம்பு கட்டுப்படுத்தப்பட வேண்டும்’ என அன்றே வலியுறுத்தியது கழகம்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.